# மருதம்

பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என அழைக்கப்பட்டது.. இதனால் மருத நிலத்தில் வாழ்ந்தோர் உழவுத் தொழில் புரிவோராவர். மருதநில மக்கள் உழவர் எனப்பட்டனர், மருத நிலத்தலைவர்கள் மகிழ்நன், ஊரன் என்று அழைக்கப்பட்டனர்.

## மருதநிலத்தின் சமய நம்பிக்கை

"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" - தொல்காப்பியம். இவ்வாறு தொல்காப்பியம் மருதநில கடவுளாக வேந்தனை கூறுகிறது. ஆனால் பிற்கால நூல்கள் இந்திரனை மருதநிலக் கடவுளாக கூறுகிறது. வேந்தனே ஆரிய கலப்பினால் இந்திரனாக மாறியிருப்பதாக தமிழ் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். திராவிட ஆரிய கலாசாரக் கலப்பு ஏற்பட்ட பிற்காலத்தில் ஆரிய இந்திரன், திராவிட வேந்தன் என்னும் தெய்வத்துடன் இணைக்கப்பட்டான். இது, தொல்காப்பியர் காலத்துக்கு மிகமிகப் பிற்காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சி. ஆகையினால்தான், மிக மிகப் பிற்காலத்தவரான உரையாசிரியர்கள் வேந்தன் என்பதற்கு இந்திரன் என்று பொருள கூறினார்கள்.

## மருதநிலத்தின் மக்கள்

வெள்ளாண்மை என அறியப்பட்ட உழவுத்தொழில் மருதநிலத்திலே வளர்ச்சி கண்டது. குறிப்பாக தாமிரபரணி ஆறு, காவிரி ஆற்றங்கரை பகுதியில் பழந்தமிழர் முழுமையான வெள்ளாண்மையில் ஈடுபட்டனர். இந்நிலங்களில் பெருநிலக்கிழார்கள் பாசணம் செய்தனர்.

.

# இலக்கணம் கூறும் மருதம்

தொல்காப்பியம்

மருதநிலத்தில் வாழ்கின்ற மக்களெனத் தனியாகக் குறிப்பிடாமல்

- "ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை ஆனா வகைய திணைநிலைப் பெயரே" (தொல்.பொருள்-968)
- என்று அந்தந்த நிலத்திற்குரிய, நிலப்பெயர் அடிப்படையில் மக்கட்பெயh;;என்று தொல்காப்பியர் சொல்கின்றார்

- நாற்கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கம்
- 'உழவர் உழத்தியர் கடையர் கடைசியர்' (நம்பி. 23)
- என இருவகை மருதநில மக்களைப் பற்றி எழுதியிருக்கின்றார்.
- புறப்பொருள் வெண்பாமாலையின் சான்றுப்பாடலும்,
- "களமர் கதிர்மணி காலோகம் செம்பொன்
- வளமனை பாழாக வாரிக் – கொளன்மலிந்து
- கண்ணார் சிலையார் கவர்ந்தார் கழல்வேந்தன்
- நண்ணார் கிளையலற நாடு" (புறப்.15)

# இலக்கணம் கூறும் மருதம்

- இவ்வாறு இலக்கணநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள உழவர், உழத்தியர், கடையர், கடைசியர், ஊரன், மகிழன், களமர் போன்ற ஒரு சில பெயர்களில் மருதநில மக்கள் அழைக்கப்பட்டமையை அறிய முடிகிறது.
- கிபி 900-களில் சோழ ஆட்சியின் மீள் வருகையின் பின்னர் மருதநிலம் பெருவளர்ச்சி கண்டது. சோழர்கள் தொண்டை நாட்டையும், கொங்கு நாட்டையும் கைப்பற்றி அங்கிருந்த குறும்பர், வேட்டுவர் ஆகியோரையும் வென்று அவர்களின் நிலங்களில் வெள்ளாண்மை செய்துள்ளனர். அது மட்டுமின்றி இக்கால கட்டத்தில் அங்கு வெள்ளாளரை குடியமர்த்தி மருதநிலத்தை விரிவுபடுத்தியும் உள்ளனர். குறும்பர், வேட்டுவர், இருளர் மக்களில் பலரும் விவசாயக் கூலிகளாக மாற்றப்பட்டு மருத நிலத்தின் மக்களாக மாற்றப்பட்டதும் இக்கால கட்டத்தில் தான். இக்கால கட்டத்தில் எழுந்த திவாகர நிகண்டு
- “களமர் தொழுவர் மள்ளர் கம்பளர்
- வினைஞர் உழவர் கடைஞர் இளைஞர் (என்று அனையவை)
- கழனிக் கடைந்தவர் (பெயரே)” (திவாகரம்.130)
- என்று குறிப்பிடுகிறது. இதனைப் போன்றே பிங்கல நிகண்டு,
- “களமர் உழவர் கடைஞர் சிலதர்
- மள்ளர் மேழியர் மருதமாக்கள்” (பிங்கலம்.132)
- என்று மருதநில மக்களில் ஆறு பிரிவினராகவும், மருதநில மக்கள்
- “களமரே தொழுமரே மள்ளர்
- கம்பளர் உழவரொடு
- வினைஞர் கடைஞர்” (சூடாமணி.71)
- என்ற ஏழு வகைப் பிரிவினர் என்று சூடாமணி நிகண்டும் கூறுகின்றன. இவை யாவும் பிற்காலத்தவரின் பாகுபாடு என் அறிஞர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மருத நிலத்தின் பொழுதுகள் - கருப்பொருட்கள்_உரிப்பொருட்கள்

- கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பெரும் பொழுதுகளும் வைகறை, விடியல் என்னும் சிறுபொழுதுகளும் மருத நிலத்துக்குரிய பொழுதுகளாகும்.

- *தெய்வம்*: வேந்தன் (கடவுள்)
- உழவர், உழத்தியர், கடையர், கடைசியர்
- *பறவைகள்*: நாரை, குருகு, தாரா, அன்றில்
- *விலங்குகள்*: எருமை, நீர்நாய்
- *மலர்கள்*: தாமரை, கழுநீர், குவளை
- *மரங்கள்*: காஞ்சி, மருதம்
- *உணவு*: செந்நெல், வெண்நெல்
- *பண்*: மருத யாழ்
- *பறை* : நெல்லரி
- *தொழில்*: களைகட்டடல், நெல்லரிதல், கடாவிடல்
- *நீர் நிலை* : பொய்கை, ஆறு.
-
- *அக ஒழுக்கம்* : ஊடல்
- *புற ஒழுக்கம்* : உழிஞை

# கருப்பொருள் - உரிப்பொருள்











# நெய்தல் (திணை)

- பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். கடலும் கடல் சார்ந்த இடங்களும் *நெய்தல்* என அழைக்கப்படுகின்றன. நெய்தல் நிலத்தலைவர்கள் கொண்கன், சேர்ப்பன், துறைவன், புலம்பன் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர். "வருணன் மேய பெருமணல் உலகமும்" எனத் தொல்காப்பியம் இதுபற்றிக் கூறுகிறது.
- நெய்தல் மலரில் உப்பங்கழிகளில் பூக்கும் உவர்நீர் மலர், நெல்வயலில் பூக்கும் நன்னீர் மலர் என இருவகை உண்டு.
- நெய்தல் நிலத்தின் பொழுதுகள்
- கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பெரும் பொழுதுகளும் வைகறை, எற்பாடு என்னும் சிறுபொழுதும் நெய்தல் நிலத்துக்குரிய பொழுதுகளாகும்.
- நெய்தல் நிலத்தின் கருப்பொருட்கள்
- *தெய்வம்*: வருணன்
- *மக்கள்*: சேர்ப்பன், நுளைச்சி, நுளையர், பரதவர், பரத்தியர்
- *பறவைகள்*: கடற்காகம்
- *விலங்குகள்*: சுறா
- *மரங்கள்*: கண்டல், புன்னை, ஞாழல்
- *மலர்கள்*: நெய்தல், தாழை, கடம்பு
- *பண்*: மீன்கோட் பறை, விளரி யாழ்
- *தொழில்*: மீன் பிடித்தல், மீன் உலர்த்தல், உப்பு உணக்கல், உப்பு விற்றல்
- *உணவு* : மீன்
- *நீர் நிலை* : கேணி, கடல்
- நெய்தல் நிலத்தின் உரிப்பொருட்கள்
- *அக ஒழுக்கம்* : இரங்கல்
- *புற ஒழுக்கம்* : தும்பை

# கருப்பொருள் - உரிப்பொருள்












# பாலைத்திணை

- பண்டைத் தமிழகத்தில் பண்பின் அடிப்படையில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். குறிஞ்சி, முல்லை ஆகிய நிலத்திணைகளுக்கு இடையிலமைந்த பரந்த நிலப் பகுதி பாலை ஆகும். அதாவது காடாகவுமில்லாமல் மலையாகவும் இல்லாமல் இரண்டும் கலந்து மயங்கி வெப்ப மிகுதியால் திரிந்த சுரமும் சுரம் சார்ந்த இடமும் பாலை நிலமாகும். பாலை நிலத்தலைவர் காளை, விடலை என அழைக்கப்பட்டனர். பாலை நில மக்கள் மறவர் மற்றும் எயினர் எனப்பட்டனர் "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" - சிலப்பதிகாரம்
- பாலை நிலத்தின் பொழுதுகள்
- இளவேனில், முதுவேனில், பின்பனி என்னும் பெரும் பொழுதுகளும் நண்பகல் என்னும் சிறுபொழுதும் பாலை நிலத்துக்குரிய பொழுதுகளாகும்.
- பாலை நிலத்தின் கருப்பொருட்கள்
- *தெய்வம்*: கொற்றவை
- *மக்கள்*: விடலை, காளை, மறவர், மறத்தியர்
- *பறவைகள்*: பருந்து, கழுகு
- *மரங்கள்*: உழிஞ, பாலை, இருப்பை
- *மலர்கள்*: மராம்பு
- *பண்*: பஞ்சுரப் பண் (பாலை) யாழ்
- *பறை* : ஆறலை, சூறைகோள்
- *தொழில்*: வழிப்பறி செய்தல், சூறையாடல், ஆறலைத்தல்
- *உணவு*: ஆறலைத்தலால் வரும் பொருள்
- *நீர்*: கிணறு
- *விலங்கு*: வலியிலந்த புலி
- *யாழ்*: பாலையாழ்
- *ஊர்*: குறும்பு
- பாலை நிலத்தின் உரிப்பொருட்கள்
- *அக ஒழுக்கம்* : பிரிதல்
- *புற ஒழுக்கம்* : வாகை

# கருப்பொருள் - உரிப்பொருள்













# களவியல்

- தலைவன் தலைவியின் திருமணத்துக்கு முன் உள்ள காதல் வாழ்க்கை பற்றிய இயல். தலைவியைத் தலைவன் முதன்முதல் பார்ப்பது தொடங்கிக் காதலித்துப், பின் திருமணத்திற்காக அவன் பொருள் தேடிப் பிரிந்து செல்லுதல் வரை உள்ளவை களவியலில் கூறப்பட்டுள்ளன.

# கற்பியல்

- கற்பியல் என்பது திருமணத்திற்குப் பின் உள்ள குடும்ப வாழ்க்கையைப் பற்றிய இயல் ஆகும்.

- அகப்பொருளில் தலைவன் என்னும் சொல் தனிப்பட்ட ஒருவனை உணர்த்தாது. காதல் வாழ்க்கையில் காதலனாகவும், இல்லற வாழ்க்கையில்கணவனாகவும் வாழும் எவனையும் குறிக்கும். தமிழ் இலக்கண இலக்கியங்கள் இவனைப்பற்றிக் கூறும் செய்திகள் தமிழரின் வாழ்க்கையைப் புலப்படுத்துகின்றன.
- தலைவனைத் தலைமகன், கிழவன், கிழவோன் என்றெல்லாம் குறிப்பிடுவர்.
- அவனுக்கு அவள், அவளுக்கு அவன் என உரிமை உண்டாவதைக் கிழவன், கிழத்தி என்னும் சொற்களால் குறிப்பிடுவர். (கிழமை = உரிமை)

# காதல் வாழ்க்கையில்

- வேட்கை, காதலியிடம் பேச்சுக்கொடுத்தல், அவளைத் தொட்டுப் பயிற்றுவித்தல், இடம் பெற்றுத் தழுவுதல், தோழியின் துணையைப் பெற்றுக் கூடுதல், மடலேறுதல் (ஆண்களுக்கான விதி) பற்றிக் கூறுதல் முதலானவை காதல் வாழ்க்கையில் நிகழும்.
- ## கற்பு வாழ்க்கையில்
- கற்பு வாழ்க்கைக் காலத்தில் எப்போதெல்லாம் தலைவன் பேசுவான் என்னும் செய்தி தொல்காப்பியத்தில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.
- முதலிரவு புணர்ச்சியின்போது
- மகிழ்ச்சிக் களிப்பில்
- உரிமையில் அச்சம் தோன்றும்போது
- நன்னெறி பற்றி நினைக்கும்போது
- தலைவியின் பெருமையை எண்ணும்போது
- கடவுளை வேண்டித் தோழி தொழும்போது
- தோழியின் துன்ப அலையை மாற்றும்போது

- தலைவி கைப்பட உணவு அமிழ்தம் என்னும்போது
- தலைவிக்குப் பூச் சூட்டும்போது
- அந்தணர், சான்றோர் ஒழுக்க நெறியை எடுத்துரைக்கும்போது
- திருமணத்துக்கு முன் நிகழ்ந்தவற்றை எண்ணும்போது
- தலைவியின் குற்றங்கள் வானத்தில் எழுதிய எழுத்தைப் போல அழிந்த மகிழ்ச்சியின்போது
- தான் முன்பு செய்த குற்றங்களைத் தலைவி பொறுத்துக்கொண்டதை வாயிலர்களிடம் பாராட்டும்போது
- மகப்பேற்றுக்குப் பின்னர் நெய்நீர் ஆடி, ஐயர் அமரரைக் காட்டிச் சடங்கு செய்த பின் மனைவியிடம் உறவு கொள்ளும்போது
- மனைவியின் காலடியைப் படுக்கையில் தடவிக் கொடுக்கும்போது
- தலைவியுடன் இருப்போரை விலக்கும்போது
- பிரிதும்போது கலங்கும் தலைவி, தோழி ஆகியோரைத் தேற்றும்போது
- பிரிவது பிழை என்று பிரிய அஞ்சும்போது
- தலைவன் பேசுவான். மேலும்
- தோழியின் மடமையைப் போக்கும்போது
- வேற்று நாட்டிலிருந்து திரும்பும்போது
- வேற்று நாட்டில் சிறப்புப் பெறும்போது
- தேர்ப்பாகனை விரைந்து ஓட்டச் சொல்லும்போது
- காமக் கிழத்தியும் மனைவியும் மாறுபடும்போது தான் பட்ட துன்பத்தை விளக்கும்போது
- வினை முடிந்தபின் பெருமிதத்தோடு விருந்தளிக்கும்போது
- மாலையுடன் வரவேற்கும் கேளிருடன் உரையாடும்போது
- உதவிய வாயில்களோடு பண்ணிசைத்து மகிழும்போது
- என்று 33 காலங்களில் தலைவன் உரையாட்டு நிகழும்.

# வரைவு

- திருமணம் என்று பொருள். திருமணத்திற்காகத் தலைவனும் தலைவியும் முயல்வது தொடங்கித் திருமணம் செய்து கொள்ளுதல் வரை உள்ளவை வரைவியலில் கூறப்பட்டுள்ளன.



# அக வாழ்க்கை நிகழ்ச்சிகளும் கூற்றுகளும்

இந்த நூல் தலைவன் தலைவியின் அகவாழ்க்கை நிகழ்ச்சிகளை நம்பி அகப்பொருள் இலக்கண நூலில் உள்ளவாறு களவியல், வரைவியல், கற்பியல் என்று 3 பிரிவாகப் பிரித்துக் கூறுகிறது.

# களவியல்

- திருமணத்துக்கு முன் நிகழும் காதல் வாழ்க்கை களவியலில் கூறப்படுகிறது. இதில் நடக்கும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நம்பி அகப்பொருள் இலக்கண நூலின் அடிப்படையில், கைக்கிளை, இயற்கைப் புணர்ச்சி முதலிய 18 வகைகளாகப் பிரித்து உள்ளார் இந்நூலாசிரியர்.
- மேற்காட்டியவை, தலைவன் தலைவியைக் கண்டு காதல் கொள்ளுதல், பிறர் அறியாத களவுப் புணர்ச்சியில் தலைவனும் தலைவியும் கூடுதல், தலைவனின் தோழனாகிய பாங்கன் துணையோடும், தலைவியின் தோழியாகிய பாங்கியின் துணையோடும் காதலர்கள் சந்தித்தல், தலைவியை விரைவில் மணந்து கொள்ளுமாறு தலைவனைத் தோழி வேண்டுதல், திருமணத்திற்காகப் பொருள்தேடத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் ஆகிய நிகழ்ச்சிகளையும், இந்நிகழ்ச்சிகளில் அவர்கள் பேசிக்கொள்ளும் பேச்சுகளையும் உள்ளடக்கியவை.
- அவற்றுள் ஒரு சில நிகழ்ச்சிகளைச் சான்றாக இங்குக் காணலாம்.

# கைக்கிளை

- ஒரு தலைவியைப் பார்த்த தலைவன் அவள் அழகில் மயங்கி அவளைக் காதலிக்கத் தொடங்குகிறான். ஆனால் தலைவி அவனைப் பார்க்கவில்லை. காதலின் (களவின்) இந்தத் தொடக்க நிகழ்ச்சியைக் கைக்கிளை என்று நம்பி அகப்பொருள் இலக்கண நூல் கூறுகிறது. (கைக்கிளை : ஒருதலைக் காதல்) இக்காதல் பின்னர் இருபுறக் காதலாக மாறிவிடும்.
- காதலின் தொடக்க நிகழ்ச்சியாகிய கைக்கிளையைக் காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்று நான்கு வகைப்படுத்துகின்றனர்

# காட்சி

- காட்சி என்பது தலைவன் தலைவியை முதன்முதலில் காணுவது. அப்போது அவன் அவள் அழகில் மயங்கித் தன் மனத்துக்குள் பேசுகிறான். இதுவே தஞ்சைவாணன் கோவையில் இடம்பெறும் முதல் பாடல் ஆகும்.
- “புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
  கயலே மணந்த கமலம் மலர்ந்துஒரு கற்பகத்தின்
  அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை
  அன்னம் செந்நெல் வயலே தடம் பொய்கை
  சூழ்தஞ்சை வாணன் மலையத்திலே (1)
- (புயல் = கரியமேகம்; பொருவில் = போரிடும் வில்; கயல் = மீன்; மணந்த = சேர்ந்திருந்த; கமலம் = தாமரை; அயலே = அருகே; தடம் = பெரிய; பொய்கை= குளம்; சூழ் = சுற்றி இருக்கக்கூடிய; மலையம் = பொதியமலை)

  இந்தப் பாட்டின் பொருள்: “வெள்ளை நிற அன்னப் பறவைகள் நிறைந்து உள்ள செந்நெல் வயல்களும், பெரிய குளங்களும் சூழ்ந்திருக்கக் கூடியது தஞ்சைவாணனின் பொதியமலை. அம் மலையின் பக்கத்தில் மிக அழகான பொற்கொடி ஒன்று நிற்கிறது! அந்தப் பொற்கொடி (கூந்தலாகிய) கரிய மேகத்தைச் சுமந்து கொண்டும், பிறைநிலவை (நெற்றியாக)க் கொண்டும், போரிடும் வளைந்த இரு வில்களை (புருவமாக)க் கொண்டும், தாமரை மலரில் மீன் (முகம், கண்)களைக் கொண்டும், கற்பக மரத்தின் பக்கத்திலே நிற்கிறதே!” என்று தலைவியின் அழகில் மயங்கித் தலைவன் தனக்குள் கூறிக் கொள்கிறான்.
- செந்நெல் வயல்கள்
- இப்பாடலில் கருமேகம் தலைவியின் கூந்தலையும், பிறை அவளது நெற்றியையும், வில் புருவத்தையும், கயல் கண்களையும், தாமரை முகத்தையும், பொற்கொடி அவளது முழு உருவத்தையும் குறிக்கும் உருவகங்கள் ஆகும்.

# ஐயம்

காட்சிக்கு அடுத்தது ஐயம். அதாவது தலைவியைப் பார்த்த தலைவன் ‘இவ்வளவு அழகாக இருக்கிறாளே! இவள் தெய்வப்பெண்ணா? மானிடப் பெண்தானா? என்று ஐயம் கொள்கிறான். பின் அவளது தோற்றத்தையும் இயக்கத்தையும் கொண்டு அவள் மானிடப் பெண்தான் என ஐயம் தீர்கிறான். இது தெளிவு எனப்படும். அதன்பின் அவளது பார்வையில் அவனை விரும்பும் குறிப்பு இருப்பதைக் கண்டு மகிழ்கிறான். இது குறிப்பறிதல் எனப்படும். இந்நிலையில் காதல் ஒருபுறக் காதலாக இல்லாமல் இருபுறக் காதலாக மலர்கிறது.

- இவ்வாறு தொடங்கித் தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் களவுக் காதல் வாழ்க்கையில் மகிழ்வர்.

# பாங்கற்கூட்டம் - பாங்கியிற் கூட்டம்

- களவுக் காதலில் தலைவனால் தலைவியைச் சந்திக்க முடியாத நிலை ஏற்படும். அப்போது தலைவன் தன் நண்பனாகிய பாங்கன் உதவிகொண்டு, தலைவியைச் சந்திப்பான். இதற்குப் பாங்கற் கூட்டம் (பாங்கன் கூட்டம்) என்று பெயர்.
- தலைவியைச் சந்திக்க இயலாது காதல் நோயால் தலைவன் துன்பப்படுவதைக் கண்ட பாங்கன் 'ஒரு சிறிய குவளை நீர் வெப்பம் அடைந்திருந்தால் அதில் குளிர்ந்த நீரை ஊற்றி விளாவி அதன் வெப்பத்தைத் தணித்துவிடலாம். ஆனால் நீ அடைந்துள்ள காதல் வெப்பமோ கடல் போன்றது. கடலே வெப்பம் அடைந்தால் அதைத் தணிப்பதற்கு இந்த உலகத்தில் எந்த ஆற்றில் நீர் இருக்கிறது?' எனக் கேட்கிறான்.
- பின்னர்ப் பாங்கன் தலைவனைத் தேற்றித் தலைவியைச் சந்திக்க உதவுகிறான்
- ghங்கனின் உதவியை நாடியதுபோலத் தலைவன் தலைவியின் தோழியாகிய பாங்கியின் உதவியை நாடிப்பெற்றுக் களவு வாழ்க்கையைத் தொடர்வான். அதற்குப் பாங்கியிற் கூட்டம்என்று பெயர்.
- தலைவன் - தலைவியைச் சந்திக்க வைப்பதற்காகப் பாங்கி இரவு, பகல் ஆகிய இரு நேரங்களிலும் உதவுவாள். ஏதாவது ஓர் இடத்தைக் குறிப்பிட்டு அங்குத் தலைவியை அழைத்துச் சென்று தலைவனைச் சந்திக்கச் செய்வாள். இவை இரவுக்குறி எனவும் பகற்குறி எனவும் கூறப்படும்.
- இரவில் தலைவன் மலைப் பகுதிகளைத் தாண்டி வந்து தலைவியைச் சந்தித்துப் பிரியும் போது தலைவி, வழியில் உள்ள விலங்குகளை நினைத்தும் பெய்யும் மழையை நினைத்தும் அச்சப்படுவது உண்டு.

'சிங்கமும் யானையும் சண்டையிட்டுக் கொ ள்ளும் வழியில் தலைவன் செல்லுகிறான். மேலும் மழையும் பெய்து அவனைத் துன்புறுத்துகிறது. அச்சம் தரக்கூடிய அந்த வழியில் சிங்கம், யானையிடமிருந்து அவர் தம் வீரத்தால் தம்மைக் காப்பாற்றிக் கொள்வார். ஆனால் அவர் மழையில் நனைந்து கொண்டு செல்லுவார். அவர் மீது படும் மழைத்துளிகளைத் துடைக்க என்மனம் அவருக்குத் துணையாகச் செல்கிறது' என்று தலைவி தலைவன் மேல் உள்ள தன் அன்பை வெளிப்படுத்துகிறாள்.

- இவ்வாறு காதலிக்கத் தொடங்கித் திருமணம் செய்து கொள்ளுமாறு தோழி வற்புறுத்த, அதனை ஏற்றுத் தலைவன் பொருளுக்காகப் பிரிவது வரை உள்ளஒற்றிற்குக் களவியல் என்று பெயர்.

# வரைவியல்

- இரண்டாவதாக உள்ள வரைவியலில்
- (1) வரைவு மலிவு
  (2) அறத்தொடு நிற்றல்
  (3) உடன்போக்கு
  (4) கற்பொடு புணர்ந்த கவ்வை
  (5) மீட்சி
  (6) தன் மனை வரைதல்
  (7) உடன்போக்கு இடையீடு
  (8) வரைதல்
- ஆகிய 8 நிகழ்ச்சிகள் உள்ளன. வரைவு என்பது திருமணம். களவு வாழ்க்கையின் இறுதியில் நிகழும் திருமணம் பற்றிய இயல் வரைவியல் ஆகும். திருமணத்திற்கான முயற்சிகள், களவுக் காதலைப் பெற்றோர்க்குத் தெரிவித்தல், பெற்றோர் மறுத்தால் தலைவியைத் தலைவன் அழைத்துச் சென்றுவிடல், திருமணம் செய்து கொள்ளல் என்பனவற்றைக் குறிப்பவை மேற்காணும் நிகழ்வுகள்.
- என்று பெயர்.

- தலைமகளிடம் காதலால் ஏற்பட்ட வேறுபாட்டைக் கண்ட செவிலித்தாய் பாங்கியிடம், கேட்கிறாள். அதாவது ‘தினைப் புனம் காவலுக்குச் சென்று வந்த பின்னர் என் மகளுடைய மார்பில் பொன் போன்ற பசலை பாய்ந்துள்ளது. கண்களும் நீர்நிறைந்து வருத்தத்துடன் காணப்படுகின்றன. நான் திரும்பத்திரும்பப் பலமுறை சொல்லுவதைக் காதில் கேட்டுக் கொள்ளாமல் ஏதோ நினைப்பில் உள்ளாள், பாலும் உண்ணாது பசியறியாமல் உள்ளாள். மான்போன்ற அழகிய என் மகளுக்கு என்ன நடந்தது?’ என்று செவிலித்தாய் பாங்கியைக் கேட்கிறாள். பாங்கியும் இதுதான் சரியானநேரம் என்று அவள் கேட்கும்போதே தலைவியின் காதலைச் செவிலித்தாய்க்கு உணர்த்திவிடுகிறாள்.
- . ‘மேகங்கள் தங்கி இருக்கக்கூடிய சோலையில் நாங்கள் விளையாடிக் கொண்டிருந்தோம். மாலை அணிந்த ஒரு தலைவன் நம் தலைவியிடம் வந்து, ‘போர் செய்யும் கொடிய தீக்கணை போன்ற உன் கண்ணைக் கண்டு அஞ்சி நீலமலர் நீரின் உள்ளே ஒளிந்து கொண்டது; அதனால் நீலமலரும் நீயும் நண்பர்களாக இருங்கள்’ என்று சொல்லி நீல மலரை அவளுக்குப் பறித்துக் கொடுத்தான். அவ்வாறு பூவைத் தந்ததிலிருந்து தலைவிக்கு இவ்வாறு வேறுபாடு தோன்றி உள்ளது என்று தலைவியின் காதலைச் செவிலித்தாய்க்கு உணர்த்துகிறாள்.
- இவ்வாறு பாங்கி செவிலிக்குத் தலைவியின் காதலைத் தெரிவிப்பதற்கு **அறத்தொடு நிற்றல்**

# கற்பியல்

அக வாழ்க்கை பற்றிய இயல் கற்பியல். இதில்,

(1)இல்வாழ்க்கை
(2)பரத்தையிற் பிரிவு
(3)ஓதற்பிரிவு
(4)காவற்பிரிவு
(5)தூதிற்பிரிவு
(6)துணைவயிற் பிரிவு
(7)பொருள்வயிற் பிரிவு

என்று 7 பகுதிகள் உள்ளன. தலைவியின் இல்லத்திற்குச் சென்று வந்த செவிலித்தாய் அவள் மகிழ்ச்சியாக வாழ்வதை நற்றாயிடம் சொல்கிறாள். அதாவது வானத்தின் மேல் உள்ள தேவர்களின் தலைநகரமாகிய அமராவதி நகரம் மண்ணில் வந்தது போன்று மகிழ்ச்சியும், செல்வமும் உடையதாகத் தலைவியின் வீடு உள்ளது என்று மகிழ்ச்சியோடு கூறுகிறாள்.தலைவன் பரத்தையிடம் சென்று வந்தபோது தலைவி அவனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். அதற்குப் பாங்கி தலைவனை ஏற்றுக் கொள்வதே நல்ல குணம் என்று எடுத்துக் கூறுகிறாள். ‘தலைவியே! தலைவர் முன்பு உன்னைப் பற்றி நினைக்காமல் பரத்தையிடத்துப் பிரிந்து சென்றவர், இப்போது உன்னை நினைத்து உன் வீட்டின் வாயிலில் வந்து நிற்கிறார். அவரது குற்றத்தைப் பார்க்காமல் அவரை ஏற்றுக்கொள். அதுவே நல்ல குணம் ஆகும்’ என்று பாங்கி தலைவிக்கு நல்லதை எடுத்துக் கூறுகிறாள். அவளது வாழ்க்கை இனிமை உடையதாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறாள்.

இவ்வாறு கற்பியலில் இல்வாழ்க்கை நிகழ்வுகள் பற்றிய பாடல்கள் அமைந்துள்ளன. .

# பாலைத் திணையின் இயல்புகள்

பாலை நிலத்து மக்களின் ஒழுக்கம், பண்பு ஆகியவற்றை நோக்கும் போது பாலையின் சிறப்புகளாகக் குறிக்கப்படுவன பின்வருமாறு:

(1) உடன்போக்கு
(2) நற்றாய் வருந்துதல்
(3) செவிலி மகளைத் தேடிச் செல்லல்
(4) செலவு அழுங்குவித்தல்
(5) தலைவியை ஆற்றுவித்தல்

இவை பாலைத் திணைக்கு உரிய சில அகவாழ்க்கை நிகழ்வுகள் ஆகும். கீழ் வருவன பாலைத் திணைக்கு உரிய புறவாழ்க்கை நிகழ்வுகள் ஆகும்.

(1) கொள்ளை அடித்தல்
(2) அறம் பாராட்டல்

காதல் கொண்ட தலைவனும் தலைவியும் பிறர்க்குச் சொல்லாமல் ஊரை விட்டுச் சென்றுவிடுவது **உடன்போக்கு** எனப்படும். தலைவனுடன் தலைவி போவதால் இது உடன்போக்கு என்று சொல்லப்படுகிறது.

உடன்போக்கு என்பதற்குக் களவுக் காதலர் கற்பு வாழ்க்கை மேற்கொள்ள ஊரை விட்டுச் செல்வது என்று பொருள் கொள்ளலாம்.

தலைவன் பொருள் ஈட்டச் செல்கிறான். தன்னை அவன் பிரிகிறான் என்பதை உணர்ந்த தலைவி வருந்துகிறாள். தோழி தலைவனிடம் போய்த் "தலைவியையும் உடன் அழைத்துச் செல்" என்கிறாள். அவன் அதற்குச் சரி என்கிறான். தோழி தலைவியிடம் இதனைச் சொல்லத் தொடங்குகிறாள்.

"தோழியே கேள் ! தலைவன் பொருள் ஈட்டப் பிரிந்து போவான் என்ற நம் மனத்துன்பம் நீங்கித் தொலைவில் செல்லவிருக்கிறது.

தலைவன் செல்லும் வழியில் கூர்மையான பல்லை உடைய பெண் செந்நாய் பசியால் வருந்தும். அதன் பசியைப் போக்க நினைக்கும் ஆண் செந்நாய். அப்போது பெண்மான் ஒன்று ஆண் கலைமானைத் தேடிக் கொண்டிருக்கும். ஆண் செந்நாய், ஆண் கலைமானின் தொடையைச் சிதைக்கும் (கிழிக்கும்). இதைக் கண்டு பெண்மான் அலறும். வெப்பம் மிக்க வழியாக அவ்வழி இருக்கும். ஆறலை கள்வர்கள் (ஆறு + அலை + கள்வர் - வழியில் மறித்துத் துன்புறுத்துகின்ற திருடர்) வழிப்போக்கர் மீது கல்லை எடுத்து எறிவர். கிழிசல் ஆடையையும், உலர்ந்த குடையையும் உடைய வழிப்போக்கர் அஞ்சி மரத்தில் ஏறுவர். உணவை வேட்டையாட எண்ணி இனத்திலிருந்து பிரிந்து வந்த பருந்து வானத்தில் பறக்கும் பொழுதை எதிர் நோக்கி அம்மரத்தில் இருக்கும். இத்தன்மையான கடுமையும் கொடுமையும் நிறைந்த காட்டு வழியில் பெரிய தோளையும் குவளை மலர் போன்ற கண்களையும் உடைய இவளும் நம்முடன் வருவாள்" என்று தலைவன் கூறியதாகத் தோழி கூறுகிறாள். (**அகநானூறு -285, காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்**)

பாலை நிலம் வெப்பமும், காட்டு விலங்குகள், ஆறலை கள்வர்கள் ஆகியோரின் கொடுமைகளும் நிறைந்ததாயினும், தலைவியின் பிரிவுத் துயருக்கு அஞ்சி அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்லத் தலைவன் துணிகிறான் என்பதை இப்பாடலில்